கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - செப்டம்பர் 19, 2025

Weekly E-paper ● September 19, 2025

அந்தி தொடர்ந்து அரசாள முடியாது!

சுப.வீரபாண்டியன்

இயக்கச் செய்திகள்

கர்ச்சிப் சொல்லும் கதை

தலையாங்கம்

அமித்ஷாவிடம் கட்சியை அடகு வைத்த பழனிச்சாமி!

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2056, - செப்டம்பர் 19, 2025 Weekly E-paper ● September 19, 2025

அநீதி தொடர்ந்து அரசாள முடியாது!

சுப.வீரபாண்டியன்

அரை நூற்றாண்டுக்கும் மேலாகிவிட்டது .... அந்தப் பாலஸ்தீன மண்ணில் அழுகையும், அலறலும் இன்னும் ஓயவில்லை!

எந்த ஒரு நியாயமான காரணமும் இல்லாமல், இஸ்ரேல் பாலஸ்தீனத்தின் மீது தொடர்ந்து போர் நடத்திக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கிற ஹமாஸ் என்னும் விடுதலைப் போராட்டப் படையை எதிர்கொள்ள இயலாமல், காசா என்னும் துண்டு நிலத்தில் வாழும் மக்களின் மீது, தொடர்ந்து குண்டுமழை பொழிந்து கொண்டிருக்கிறது இஸ்ரேல், துணை போகிறது அமெரிக்கா !

1948 ஆம் ஆண்டு , இஸ்ரேல் என்னும் ஒரு நாட்டை உருவாக்கிய போது, மக்கள் இல்லாத நிலத்திற்கு, நாடு இல்லாத மக்களை அழைத்து வருகிறோம் என்றார்கள், அந்தப் பகுதியைச் சொந்தம் கொண்டாடும் யூதர்கள் !

அதனை மக்கள் இல்லாத நிலம் என்று சொன்னது எவ்வளவு பெரிய வரலாற்றுப் பொய்! அங்கு இருந்த அரபு மக்களை அடித்துத் துரத்தி விட்டுத்தான், அவர்கள் இது தங்கள் நாடு என்று சொந்தம் கொண்டாடினார்கள்!

அமெரிக்காவின் தலையீடு காரணமாக, ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு, இஸ்ரேல் என்ற நாடு உலக வரைபடத்தில் உருவானது! அத்துடன் நிறைவடையாத இஸ்ரேலியர்கள், பாலஸ்தீனத்தையும் கைப்பற்றிக் கொள்ளத் தொடர்ந்து போர் நடத்தி வருகிறார்கள்!

இன்று வரையில் அங்கு 18,000 குழந்தைகள் உள்பட, 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஊடகவியலாளர்களே 217 பேர் அங்கு பலியாகி இருக்கிறார்கள். தொண்டு ஊழியம் செய்ய வந்த ஐ.நா. அவையின் பணியாளர்களும் அங்கு மரணித்திருக்கிறார்கள்.

இந்தக் கொடுமைகளை எதிர்த்து, ஜனநாயக உணர்வும், மனித நேயமும் கொண்ட மக்கள் உலகெங்கும் தங்கள் எதிர்ப்புகளைப் பதிவு செய்து வருகின்றனர்!

தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், நேற்றைக்குத் தன் கடுமையான கண்டனத்தை வெளியிட்டிருக்கிறார்! "காசாவில் ஒவ்வொரு நாளும் நடைபெறும் நிகழ்வுகள் நெஞ்சை உருக்குகின்றன. இந்திய அரசு உடனே தலையிட வேண்டும்! உலக நாடுகள் ஒருங்கிணைந்து அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும் " என்று அவர் கூறி இருக்கிறார்! இஸ்ரேலையும், அமெரிக்காவையும் கண்டித்துப்

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு, சென்னையில் அனைத்துக் கட்சிகளையும், அமைப்புகளையும் இணைத்து ஒரு பேரணியையும், பொதுக்கூட்டத்தையும் நடத்தி இருக்கிறது!

மனசாட்சியும், ஜனநாயக உணர்வும் கொண்ட இஸ்ரேல் மக்கள் சிலரே இப்போது தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்! அமெரிக்க ராணுவத்தைச் சேர்ந்த ஒருபெண் அதிகாரி, இந்தப் போருக்கு எதிராகக் குரல் கொடுப்பதையும், அதற்காக அவர் தண்டிக்கப்படுவதையும் தொலைக்காட்சிகள் காட்டின!

அநீதி தொடர்ந்து அரசாள முடியாது! விரைவில் உலகம் விழிக்கும், பாலஸ்தீனத்தில் அமைதி பிறக்கும் !

●

தந்தை பெரியாரின் 147ஆம் பிறந்த நாள்

இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பில் நூல் அறிமுக கூட்டம் காரைக்குடியில் 13-09-2025 அன்று தலைமை ஒருங்கிணைப்பாளர் இளங்கோ தலைமையில் நடைபெற்றது. பேரவைத் தலைவர் நூல் அறிமுகவுரையை நிகழ்த்தினார். பொதுச் செயலாளர் சிற்பி வாழ்த்துரை வழங்க, தென்மண்டலத் துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் இராம.வைரமுத்து தொகுப்புரை வழங்கினார்கள். தோழர்கள் சிதம்பரம், பரமேஸ்வரன், குமரன் தாஸ், நவில், கலைமணி செல்வம், முடியரசன், ரேவதி குட்டி பழனிச்சாமி உள்ளிட்ட தோழர்கள் மேனாள் அமைச்சர் தென்னவன் உள்ளிட்ட தி.மு.கவினரும் கலந்து கொண்டனர்.

பேரறிஞர் அண்ணாவின் 117ஆம் பிறந்தநாள்

பேரறிஞர் அண்ணா அவர்களில் 116 ஆம் ஆண்டையொட்டி 15-09-2025 அன்று பேரவைத் தலைமை அலுவலகத்தில் தோழர் பொள்ளாச்சி மா.உமாபதி அவர்கள் தலைமையில் தோழர்கள் பெல் ராஜன், செல்வின், எட்வின், இக்லாஸ், முத்தையா குமரன், மனோகரன், இளங்கோ உள்ளிட்டோர் அண்ணாவின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

தென்மண்டல உறுப்பினர் பட்டியல்

தெற்கு மண்டலத்தின் பேரவை உறுப்பினர் பட்டியலை (பெயர், முகவரி மற்றும் அலைபேசி விவரங்களுடன்) பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப.வீரபண்டியன் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் ஆகியோரிடம் தெற்கு மண்டலத் துணைப் பொதுச் செயலாளர் வழக்கறிஞர் இராம. வைரமுத்து வழங்கினார்.

தந்தை பெரியாரின் 147ஆம் பிறந்தநாள்

தந்தை பெரியாரின் 147 ஆம் பிறந்தநாளை முன்னிட்டுப் பேரவையின் தலைமை அலுவலகத்தில் 17-09-2025 அன்று தந்தை பெரியார் அவர்களின் படத்திற்குப் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் தோழர்கள் செல்வின், பெல் ராஜன், எட்வின், கார்த்தி, இக்லாஸ் மனோகரன், திராவிடச் செல்வன் உள்ளிட்டப் பேரவைத் தோழர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

புலவர் செல்லக் கலைவாணன் மறைந்தார்

திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தஞ்சை மாவட்டத் தலைவர் புலவர் செல்லக் கலைவாணன் அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 31-09-2025 அன்று மறைவெய்தினார். 14-09-2025 அன்று தஞ்சையில் நடைபெற்ற அவரின் படத்திறப்பு, புகழ் வணக்க நிகழ்வில் பேரவைத் தலைவர் சுப.வீரபாண்டியன், பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், பொருளாளர் செல்வின் சவுந்தரராஜன் உள்பட பேரவைத் தோழர்கள் புகழ்வணக்க உரையாற்றினார்கள்.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

கர்ச்சிப் சொல்லும் கதை

ஒரு 'கர்ச்சீப்'பை வைத்து 'ஒத்தல்லோ' என்ற புகழ்பெற்ற நாடகக் காவியத்தை எழுதினார் சேக்ஸ்பியர். அங்கே டெஸ்டிமோனோ, யாகோ, எமிலியா போன்ற பாத்திரத்திரங்கள் நாடகத்தில் சுவை சேர்த்து மெருகேற்றினார்கள்.

இங்கே நம்முடைய எதிர்கட்சித் தலைவருக்கும் ஒரு வெள்ளை கர்ச்சிப் கிடைத்திருக்கிறது.

திடீரென்று டில்லிக்குப் புறப்பட்டுப் போனார் எடப்பாடியார். அமித்ஷாவைச் சந்தித்தார், அரைமணிநேரம் பேசினார், வெளியே வந்தார்.

அங்கு என்ன நடந்ததோ? காரில் ஏறிய எடப்பாடியார், அந்த வெள்ளைக் கர்ச்சிப்பால் முகத்தை மூடிக்கொண்டு சர்ர்ர் என்று போய்விட்டார், செய்தியாளர்களைக் கூடச் சந்திக்காமல்.

உள்கட்சிப் பிரச்சனையைத் தீர்க்க, வெளிக்கட்சித் தலைவர் அமித்ஷாவிடம் பஞ்சாயத்துப் பண்ண வேண்டி செங்கோட்டையன் சந்தித்த பின்னர்தான் இந்த எடப்பாடியின் 'கர்ச்சிப்' சந்திப்பு நடைபெற்று இருக்கிறது.

அங்கு என்ன நடந்திருக்கும் என்பது குறித்து ஆராய வேண்டியதில்லை. ஆனால் நான் கர்ச்சிப்பால் முகத்தைத்தான் துடைத்தேன், இந்த ஊடகங்கள் கர்ச்சிப்பை வைத்து ஏன் முகத்தை மூடினார் என்று ஊதிப்பெருக்கி விட்டது என்கிறார் எடப்பாடி பழனிச்சாமி. ஐயோ பாவம், "இனி 'ரெஸ்ட்ரூம்' போவதானாலும் கூட ஊடகங்களிடம் சொல்லிட்டுத்தான் போகனும் போல" என்று நொந்து பேசியிருக்கிறார் அவர், எடப்பாடியில்.

அதுசரி, அங்கே என்ன நடந்திருக்கும்? "2029 தான் எங்க இலக்கு, 2026 நீ ஜெயித்தால் என்ன, தோத்தா என்ன உன் கட்சி அதோகதிதான். அதன்பிறகு செங்கோட்டையன் கையில சின்னதா ஒரு ரெட்டை இலையைக் கொடுத்து 2029 ஐ நான் பாத்துக்கிறேன்" என்று யாராவது சொல்லி இருப்பாங்களோ, என்னவோ!

யாருக்குத் தெரியும்? கர்ச்சிப் என்றால் சும்மாவா? சேக்ஸ்பியர் ஒத்தல்லோ மூலம் டெஸ்டிமோனோவிடம் கொடுத்த கர்ச்சிப் சோகத்தில் முடிந்தது. இங்கே எடப்பாடியிடம் ஒரு கர்ச்சிப் சோகத்தில்தான், கதை இருக்கிறது.

கர்ச்சிப் என்னவோ பரமர ரகசியமாகத்தான் இருக்கிறது.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

தென்மண்டலக் கலந்துரையாடல்

மதுரை, விருதுநகர், திண்டுக்கல் கிழக்கு மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்டப் பேரவை சார்பில் 05-09-2025 அன்று மதுரை மருத்துவர் செல்வராஜ் நினைவு நூலகத்தில் அறிவுரைஞர் குழு உறுப்பினர் புலவர் ஜெயபால் சண்முகம் தலைமையில் கொள்கை பரப்புச் செயலாளர் வேடசந்தூர் ரவி முன்னிலையில் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ்,மதுரை மாவட்டச் செயலாளர் பி.அமர்நாத், மாவட்டத் துணைத் தலைவர் பேராசிரியர் சாந்தி உள்படத் தென்மண்டலப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர்.

ஆட்சிக்காக அமித்ஷாவிடம் கட்சியை அடகு வைத்த பழனிச்சாமி!

வழக்கறிஞர் இராம. வைரமுத்து

அ.இ.அ.தி.மு.கவிலிருந்து பிரிந்து சென்றவர்களை ஒருங்கிணைக்கமுன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் அறிவித்திருந்த பத்து நாள் கெடு முடிந்துள்ள நிலையில், பேரறிஞர் அண்ணாபிறந்தநாள்விழாபொதுக்கூட்டத்தில் "அம்மையார் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு ஆட்சிக்குப் பல்வேறு இன்னல்கள் ஏற்பட்டன. அதிலிருந்து ஆட்சியையும், கட்சியையும் காப்பாற்றித் தந்தது பா.ஜ.க தான். அந்த நன்றிக் கடனுக்காகத்தான் பா.ஜ.கவோடு தற்போது கூட்டணியில் இருக்கிறோம்" என்று திருவாய் மலர்ந்திருக்கிறார் அ.இ.அ.தி.மு.க தலைவர் எடப்பாடி பழனிச்சாமி. தன்னுடைய நிலைப்பாட்டுக்கு ஆதரவாக திருவள்ளுவரைத்துணைக்கு அழைத்திருக்கிறர். சேக்கிழார் எழுதிய கம்பராமாயணத்தை படித்துத் தேர்ந்த பழனிச்சாமிக்கு திருக்குறளும் தெரிந்திருக்கிறதே!

அ.இ.அ.தி.மு.க சட்டமன்றக் கட்சித் தலைவராக சசிகலா தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு மறுநாளே ஜெயலலிதா, சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் மீதான முக்கிய வழக்கில் உச்சநீதிமன்றம் அளிக்க இருக்கிற தீர்ப்பு வெளியாகும் தேதி அறிவிக்கப்படுகிறது.. அதைத் தொடர்ந்து சசிகலாவை முதல்வராக ஏற்க மறுத்து அன்றைய முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அம்மையார் ஜெயலலிதா நினைவிடத்தில் தியானம் செய்து தர்மயுத்தம் தொடங்குகிறார். கூவத்தூரில் அ.இ.அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் எடப்பாடி பழனிச்சாமியை முதல்வராக அறிவித்து விட்டு சிறை செல்கிறார் சசிகலா. அந்த நேரத்தில் தன் முட்டிதேய தவழ்ந்தே சென்று சசிகலாவுக்கு நன்றி தெரிவிக்கிறார் பழனிச்சாமி. அதன் பிறகு சட்டமன்றத்தில் நம்பிக்கை கோரும் தீர்மானத்தைத் தாக்கல்செய்தபோதுஅவருக்குஎதிராகப்பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவாளர்கள் வாக்களிக்கிறார்கள். பின்னால் அதே பன்னீர்செல்வத்தோடு சமரசமாகி அவரைத்துணை முதல்வர் ஆக்குகிறார் பழனிசாமி.

நம்பிக்கை கோரிய தீர்மானத்தில் எதிர்த்து வாக்களித்த பன்னீர்செல்வம் மற்றும் அவரது ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத அன்றைய சபாநாயகர் தனபால், "பழனிச்சாமி மீது நம்பிக்கை இல்லை, வேறு முதல்வரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று ஆளுநருக்குக் கடிதம் எழுதிய தினகரன் ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்களைத் தகுதி நீக்கம் செய்கிறார். இவ்வாறு மக்களாட்சியின் மாண்பைக் குலைத்து, ஜனநாயகத்தின் குரல் வளையை நெறித்துத்தான் நான் ஆட்சியில் அமர்ந்த பழனிச்சாமி அதற்கு "ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க அரசு உடந்தையாக இருந்தது" என்று இப்போது ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார். "பா.ஜ.கவின் தயவால் சட்டத்திற்கு விரோதமாகத் தான் பழனிச்சாமியின் ஆட்சி நீடித்துக் கொண்டிருக்கிறது" என்று மக்கள் மத்தியில் தொடர்ந்து

அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டது முற்றிலும் சரி என்பதைப் பழனிச்சாமியின் இந்த உரை உறுதிப்படுத்தி இருக்கிறது.

ஆட்சியைக் காப்பாற்றிய பா.ஜ.கவுக்கு நன்றியோடு இருப்பதாகக் கூறும் பழனிச்சாமி, தன்னை முதல்வராக்கிய சசிகலாவுக்கு நன்றியோடு இல்லையே ஏன்? அதே போன்று கடந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவோடு கூட்டணி சேராமல் தனியாகப் போட்டியிட்டாரே அது ஏன்? "நன்றி மறப்பது நன்றன்று" என்று பேசும் பழனிச்சாமி அவ்வப்போது நன்றியை மறந்து விடுகிறாரே அதன் காரணம் என்ன? பாஜக மூத்த தலைவரான அத்வானிக்கு இருப்பதாக அம்மையார் ஜெயலலிதா குறிப்பிட்ட செலெக்ட்டிவ்அம்னிசீயாபழனிச்சாமிக்கும்இருக்கிறதோ? "பன்னீர்செல்வத்தை தர்மயுத்தத்தைத் தொடங்குமாறு நான் தான் கூறினேன்" என்று வெளிப்படையாகவே தெரிவித்தவர் பா.ஜ.கவின் இராஜகுரு ஆடிட்டர் குருமூர்த்தி. பழனிச்சாமிக்கு இன்னல்களைக் கொடுப்பதே பாஜக தான். ஆனால் அதை மறைத்துவிட்டு பா.ஜ.க தான் ஆட்சியையும், கட்சியையும் காப்பாற்றியது என்று சொல்லும் பழனிச்சாமி, இதற்குப் பதிலாக ஊழல் வழக்குகளில் இருந்து என்னையும், என் மகனையும், எனது சம்பந்தியையும் காப்பாற்றுவதற்காகவே நான் பா.ஜ.க கூட்டணியில் இருக்கிறேன் என்று வெளிப்படையாகவே சொல்லி இருக்கலாம்.

தமிழ்நாட்டிற்கு பா.ஜ.க ஏராளமான நன்மைகளைச் செய்திருக்கிறது என்று பேசுகிறார் பழனிச்சாமி. தமிழ்நாட்டு மாணவர்களின் உயிரைக் குடிக்கும் நீட் தேர்வு, ஆண்டுதோறும் மின் கட்டண உயர்வுக்கு வழிவகுக்கும் உதய் மின் திட்டம், பள்ளிக் கல்வித் துறைக்கு நிதி தர மறுப்பது, மும்மொழிக் கொள்கை, தொகுதி மறு வரையறை போன்றவற்றில் எந்த நன்மையைச் சொல்கிறார் பழனிச்சாமி?

“ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும் தேர்ந்துசெய் வஃதே முறை" என்ற அய்யன் திருவள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, பழனிச்சாமிக்கு சரியான தீர்ப்பை வர இருக்கிற 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் வழங்குவார்கள். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian